# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2182/13 - 2020 ජුනි මස 30 වැනි අඟහරුවාදා - 2020.06.30

*2182/13 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளர் குறிப்பு இல. : ஹங்கு/3/2/1/479B.
காணி அமைச்சு குறிப்பு இல. : ஜே 74 ஈ 32.

நு/வதவல வித்தியாலயத்தின் அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு தேவையான கீழே காட்டப்பட்டுள்ள காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

நுவரெலியா மாவட்டத்தின், ஹங்குரான்கெத்த பிரதேச செயலாளர் பிரிவின் கொஹொக்க கோரளை, கலுஅத்தணகொள்ள கிராம அலுவலர் பிரிவின் கலுஅத்தணகொள்ள எனும் கிராமத்தில் அமைந்துள்ள, மு. பீ. நு. 573 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 02 ஆக நில அளவை மேற்கொள்ளப்பட்டுள்ள 01 ஏக்கர் 0 றூட் 0.74 பேர்ச் விஸ்தீரணங்கொண்ட கப்புகொட்டுவ எனும் பெயருடைய காணியின் விபரம் :

*01. துண்டு இல. 02*

காணியின் பெயர் : கப்புகொட்டுவ; உரிமை கோருவோரின் பெயரும் முகவரியும் : 01. கே. ஏ. டியுடர் சில்வா, ஸ்ரீ நகர், ரயிலன் பிரதேசம், கொள்ளுப்பிட்டி, 02. சுஜாதா குடாமெனிகே, எஹெலமல்பே, தும்பலஹப்புவ, கரந்தகொல்ல, 03. தயா எஹெலமல்பே, எஹெல நிவச, கரந்தகொல்ல, 04. சீ. பி. வீரசூரிய, ஹெலசிறி ஹோட்டல், ரிகில்லகஸ்கட; விஸ்தீரணம் : 01 ஏக்கர், 0 றூட், 0.74 பேர்ச்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு ஹங்குரான்கெத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.


1A - G 32406 - 32 (2020/06)



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

உரிமை கோரல் தொடர்பான உறுதிப்பத்திரங்கள் போன்றவை விசாரணையின்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஐ. எம். சேனாநாயக்க,
பிரதேச செயலாளர்,
ஹங்குரான்கெத்த.

பிரதேச செயலகம்,
ஹங்குரான்கெத்த,
2020, யூன் 29.

7 - 396

---

திருத்தம்

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : Dehi/2-1/2/Aqui/748.

2020.03.03 ஆந் திகதிய 2165/09 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பகுதி III இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவினதும் தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபையின் தெஹிவளை கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்டதுமான பூர்வாங்க மாதிரிப்பட இல. 9882 இல் குறிக்கப்பட்ட காணித்துண்டுகளின் விஸ்தீரணம் 0.0605 ஹெக்டயார் ஆகும்.

மேல் விபரிக்கப்பட்டுள்ள காணிகளில் அக்கறையுள்ள அனைத்து நபர்களும் நேராகவோ அல்லது எழுத்து மூலம் முறையாக அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுடன் தெஹிவளை பிரதேச செயலகத்தில் என்னை சந்திக்கலாம்.

01. பூர்வாங்க மாதிரிப்பட இல. 9882 இன் காணித்துண்டு இல. 1 தொடர்பாக 2020 ஆவணி மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00

02. பூர்வாங்க மாதிரிப்பட இல. 9882 இன் காணித்துண்டு இல. 2 தொடர்பாக 2020 ஆவணி மாதம் 28 ஆந் திகதி மு. ப. 11.00

03. பூர்வாங்க மாதிரிப்பட இல. 9882 இன் காணித்துண்டு இல. 3 தொடர்பாக 2020 ஆவணி மாதம் 28 ஆந் திகதி மு. ப. 12.00

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நளினி பாலசுப்ரமணியம்,
பிரதேச செயலாளர்,
தெஹிவளை.

பிரதேச செயலகம்,
இல. 154, காலி வீதி,
தெஹிவளை,
2020, யூன் 30.

7 - 397

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.